# ஒவ்வொரு மனிதனும் என் நண்பன்

ஒவ்வொரு மனிதனும் என் நண்பன்
ஒவ்வொரு மனிதனும் சகோதரன் -என் சகோதரன் - ( 2 )

1)
வறுமையில் வாழ்பவன் என் நண்;பன்
வருத்தத்தில் இருப்பவன் சகோதரன் - ( 2 )
அல்லல் படுவன் என் நண்பன்
ஆபத்தில் இருப்பவன் சகோதரன்
காரணம் அவனும் மனிதன்

2)
பிறகுலம் சேர்ந்தாலும் என் நண்பன்
பிற இனம் சேர்ந்தாலும் சகோதரன் - 2
பிற மொழி பேசினாலும் என் நண்பன்
பிற மதம் சார்ந்தாலும் சகோதரன்
காரணம் அவனும் மனிதன்

3)
அழகை இழந்தவன் என் நண்பன்
அறிவை இழந்தவன் சகோதரன் - 2
ஊனமாய் பிறந்தவன் என் நண்பன்
ஊமையாய் பிறந்தவன் சகோதரன்
காரணம் அவனும் மனிதன்